# உங்கள் கண் அறுவை சிகிச்சைக்கான தல உணர்ச்சி நீக்கி

தல உணர்ச்சி நீக்கிகளுடன் உங்களுக்கு கண் அறுவை சிகிச்சை செய்துக் கொள்ளும் போது என்னென்ன எதிர்பார்க்கலாம் என்று இந்தச் துண்டுப் பிரசுரம் விளக்கும். இது மயக்கமருந்து மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் நோயாளியின் பிரதிநிதிகளால் ஒன்றுகூடி எழுதப்பட்டது.

## கண் அறுவை சிகிச்சைக்கான தல உணர்ச்சி நீக்கி

தல உணர்ச்சி நீக்கி என்பது உங்கள் வலி உணர்வை நிறுத்தும் ஒரு வகை மருந்து ஆகும். கண் அறுவை சிகிச்சைக்கு, இது **கண் சொட்டுகள்** மற்றும்/அல்லது **ஊசி** மூலம் வழங்கப்படலாம். தல உணர்ச்சி நீக்கியை நீங்கள் பெற்ற பிறகு, நீங்கள் இன்னும் விழித்திருப்பீர்கள், உங்களுக்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்திருப்பீர்கள். அறுவை சிகிச்சையின் போது நீங்கள் எந்த வலியை உணரக்கூடாது என்பதே இதன் நோக்கம்.

## தல உணர்ச்சி நீக்கியின் நன்மைகள் என்ன?

ஒரு தல உணர்ச்சி நீக்கி பொதுவாக கண் அறுவை சிகிச்சையின் போது உங்கள் வலி உணர்வைத் தடுப்பதில் நன்றாக வேலை செய்கிறது. மேலும்:

- அறுவை சிகிச்சைக்குப் பிறகு, பல மணி நேரம் உங்களுக்கு வலி நிவாரணம் அளிக்கிறது
- பொதுவாக ஒரு பொது உணர்ச்சி நீக்கியைக் காட்டிலும் குறைவான அபாயங்கள் மற்றும் பக்க விளைவுகளைக் கொண்டுள்ளது, குறிப்பாக நீங்கள் வயதானவர் எனில்
- அறுவை சிகிச்சைக்குப் பின் விரைவான மீட்சியை வழங்குகிறது, பொதுவாக ஒரே நாளில் நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்
- உங்கள் வழக்கமான மருந்துகளில் பெரும்பாலானவற்றை தொடர்ந்து எடுக்க உங்களை அனுமதிக்கிறது
- பொது உணர்ச்சி நீக்கியை விட இன்னும் சுதந்திரமாக சாப்பிடவும் குடிக்கவும் உங்களை அனுமதிக்கிறது - இது குறித்து மருத்துவமனை ஊழியர்கள் அறிவுறுத்துவார்கள்.

## நான் ஒரு பொது உணர்ச்சி நீக்கியை விரும்புகிறேன்; நான் தேர்ந்தெடுக்க முடியுமா?

- ஆம். உங்களுக்காக திட்டமிடப்பட்டதை நீங்கள் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் வரை உங்களுக்கு எதுவும் நடக்காது.
- பொது உணர்ச்சி நீக்கியை நீங்கள் விரும்பினால், இதை உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சை நிபுணரிடம் உடனே ஆலோசிக்க வேண்டும். ஒரு பொது உணர்ச்சி நீக்கி அறிவுறுத்தப்படாமல் இருப்பதற்கு மருத்துவ காரணம் இருக்கலாம். பொது உணர்ச்சி நீக்கிகளின் கீழ் அறுவை சிகிச்சைக்கான காத்திருப்பு பட்டியல்கள் நீண்டதாக இருப்பதால், உங்கள் அறுவைசிகிச்சைக்காக நீங்கள் அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். சில மருத்துவமனைகள் பொது உணர்ச்சி நீக்கிகளின் கீழ் அறுவை சிகிச்சை வழங்க முடியாமல் போகலாம்.

## தல உணர்ச்சி நீக்கி எவ்வாறு வழங்கப்படுகிறது?

தல மயக்க மருந்துகளில் இரண்டு வகைகள் உள்ளன:

- சில அறுவை சிகிச்சைகள் கண்ணை உணர்வற்றதன்மையாக மாற்றும் கண் சொட்டுகளால் மேற்கொள்ளப்படலாம். ஊசி எதுவும் தேவையில்லை. உங்கள் அறுவை சிகிச்சை வகைக்கு இது சாத்தியமா என்பதை உங்கள் அறுவை சிகிச்சை நிபுணர் உங்களுக்குச் சொல்லுவார்

- பல அறுவை சிகிச்சைகளுக்கு தல மயக்க ஊசி தேவைப்படுகிறது. இதில் கண்ணை அசைக்காமல் வைத்திருக்க வேண்டிய அறுவை சிகிச்சைகள் அடங்கும் - எடுத்துக்காட்டாக ரெட்டினாவில் செய்யும் அறுவை சிகிச்சைகள். கண்ணின் மேற்பரப்பை உணர்வற்றதாக்க முதலில் சொட்டுகள் கொடுக்கப்படுகின்றன. பின்னர் கண்ணுக்கு அருகில் ஊசி போடப்படுகிறது (ஆனால் கண் கோளத்திற்குள் அன்று).

## தல மயக்க மருந்து ஊசி வலிமிகுந்ததா?

இது நபருக்கு நபர் மாறுபடும். முடிந்தவரை வசதியாக மாற்ற கண்ணின் மேற்பரப்பை உணர்ச்சியற்றதாக்கும் கண் சொட்டுகள் முதலில் பயன்படுத்தப்படுகின்றன. மிக நுண்ணிய ஊசி பயன்படுத்தப்படுகிறது, மேலும் குத்துதல் அல்லது அழுத்தம் போன்ற உணர்வு இருக்கலாம், இது பொதுவாக ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே நீடிக்கும்.

## கண் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அனைவருக்கும் தல மயக்க மருந்து கொடுக்க முடியுமா?

இல்லை. தல மயக்க மருந்தைப் பயன்படுத்தி உங்கள் அறுவை சிகிச்சையைப் பாதுகாப்பாகச் செய்துகொள்வதற்கு, உங்களால் பின்வருவனவற்றைச் செய்ய இயல வேண்டும்:

- 45- 60 நிமிடங்கள் கிடையாகப் படுத்தல்
- எளிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல்.

பின்வருவன இருப்பின் தல மயக்க மருந்து பொதுவாக பரிந்துரைக்கப்படுவதில்லை:

- தல மயக்க மருந்துகளுக்கு ஒவ்வாமை இருப்பதை அறிந்தால்
- கிடையாகப் படுக்க இயலாவிட்டால்
- அசையாமல் இருப்பது கடினம் அல்லது சாத்தியமற்றது எனில்,எடுத்துக்காட்டாக பார்கின்சன் நோய்
- என்ன நடக்கிறது என்பதை நினைவில் கொள்வது கடினம் எனில், எடுத்துக்காட்டாக மிதமான ஞாபக மறதி
- கட்டுப்படுத்த முடியாத இருமல்
- கடுமையான செவிப்புலன் சிக்கல்கள்
- சொல்லப்படுவதைப் புரிந்து கொள்வதில் சிரமம்
- கடுமையான கிளாஸ்ட்ரோபோபியா.

இவற்றில் ஏதேனும் உங்களுக்கு பொருந்தினால், உங்களுக்கான வாய்ப்புகள் குறித்து உங்கள் அறுவை சிகிச்சை நிபுணர் உங்கள் மயக்க மருந்து நிபுணருடன் விவாதிப்பார், ஆனால் பொது மயக்க மருந்து பரிசீலிக்கப்படும்.

### தல மயக்க மருந்தை வழங்குவது யார்?

மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் கண் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருவருக்கும் தல மயக்க மருந்து வழங்க பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

### தல மயக்க மருந்துகளில் இருந்து ஏதேனும் சிக்கல்கள் உள்ளதா?

பல நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சைக்கான தல மயக்க மருந்துகள் பாதுகாப்பானவை. சில நேரங்களில் ஊசி கண்ணைச் சுற்றியுள்ள ஒரு சிறிய இரத்த நாளத்தை சேதப்படுத்துவதால் சிராய்ப்பு அல்லது கண் வீக்கம் உருவாகலாம். இது பொதுவாக தீவிரமானது அல்ல, ஆனால் ஒரு வாரம் அல்லது அதற்கு மேலாக இருக்கக்கூடும். இரத்தத்தை மெலிதாக்கும் ஆஸ்பிரின் அல்லது பிற மருந்துகளை உட்கொண்டால் இது மிகவும் பொதுவாக ஏற்படுகிறது.

அரிதாக, ஊசி போட்ட பின் இரத்தம் வருவது கண்ணைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். அறுவைச் சிகிச்சையை இன்னொரு நாளைக்குத் தள்ளிப்போட வேண்டுமா என்பதை உங்கள் அறுவைச்சிகிச்சை மருத்துவர் முடிவு செய்யவார்.

#### *தீவிரச் சிக்கல்கள்*

உங்கள் பார்வை, இரத்த நாளங்கள் அல்லது கண் தசை பாதிப்பினால் உங்கள் கண்ணுக்கு குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படும் ஆபத்து, 5,000 இல் 1 அல்லது அதற்கும் அரிதானது (எனவே சிகிச்சையளிக்கப்பட்ட ஒவ்வொரு 5,000 நோயாளிகளில் 1 மட்டுமே பாதிக்கப்படுகிறார்). அரிதாக உங்கள் இதயம் அல்லது சுவாசத்தில் கடுமையான விளைவுகள் ஏற்படக்கூடும். இந்த சிக்கல்களைப் பற்றி உங்கள் மயக்கமருந்து நிபுணர் அல்லது கண் அறுவைச்சிகிச்சை மருத்துவரால் கூடுதல் விவரங்கள் கொடுக்க முடியும்.

# அறுவைச்சிகிச்சைக்கு முன்பு

நீங்கள் திட்டமிட்ட அறுவை சிகிச்சையை மேற்கொண்டால், உங்கள் அறுவை சிகிச்சை மற்றும் மீட்டெழுப்புக் காலத்திற்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் நிறைய செய்யலாம்.

- திரும்பிய பின்னர் வீட்டில் உங்கள் மீட்டெழுப்பிற்கு முன்கூட்டியே திட்டமிடுவது சிறந்தது, மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்

உங்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் உதவ முடியும் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் என்ன சாப்பிட வேண்டும் என்பது பற்றியும் உங்களுடைய மீட்பினை இலகுவாக்குவதற்கு வீட்டிலேயே ஏதாவது மாற்றங்களைச் செய்யத் வேண்டுமா எனச் சிந்தியுங்கள்.

- நீங்கள் பொது மயக்க மருந்து அல்லது உணர்வுநீக்கி எடுத்துக் கொண்ட அதே நாளிலேயே வீடு திரும்பினால், உங்களை வீட்டிற்கு காரில் அல்லது வாடகை வண்டியில் கூட்டி சென்று உங்களுடன் 24 மணிநேரம் கூட இருப்பதற்கு ஒரு பொறுப்பான வயதுவந்தவரை நீங்கள் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். பொது உணர்ச்சி நீக்கி அல்லது மயக்க மருந்து எடுத்துக்கொண்ட ஒருவரை கவனிப்பவர்களுக்கான விவரங்களை எங்கள் துண்டுப்பிரசுரம் *பொது உணர்ச்சி நீக்கி அல்லது மயக்க மருந்து எடுத்துக்கொண்ட ஒருவரை கவனித்தல்* என்பதில் பார்க்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/sedation
- கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தயார் செய்வது குறித்த தகவலுக்கு, *கண்புரை அறுவை சிகிச்சைக்குத் தயாராதல்,* குறித்த எங்கள் துண்டுப்பிரசுரத்தைப் பாருங்கள் இது எங்கள் இணையதளத்தில் கிடைக்கிறது: www.rcoa.ac.uk/patientinfo/cataract

## அறுவைச்சிகிச்சைக்கு முன்னாலான மதிப்பீடு மருந்தகம்

அறுவைச்சிகிச்சைக்கான தேதி திட்டமிடப்பட்டபின், ஒரு உடல்நலப் பரிசோதனை தேவைப்படுகிறது. உங்கள் உடல்நலம் பற்றிய ஒரு சிறிய வினாப்பட்டியல் உங்களுக்கு அனுப்பப்படலாம் அல்லது உங்களை ஒரு அறுவைச்சிகிச்சைக்கு முன்னாலான மதிப்பீட்டு மருந்தகத்திற்குப் போகச் சொல்லலாம். பொதுவாக ஆலோசனையளிப்பதற்காக உள்ள ஒரு மருத்துவரின் உதவியுடன், செவிலியர்கள் அறுவைச்சிகிச்சைக்கு முன்னாலான மதிப்பீட்டு மருந்தகத்தை நடத்துகிறார்கள்.

உங்கள் பொது உடல்நிலை, மருந்துகள் ஒவ்வாமை மற்றும் உங்கள் செயல்பாடுநிலைகள் பற்றிய விரிவான கேள்விகளை அவர்கள் கேட்பார்கள். உங்களுக்கு ஏதாவது மருத்துவசோதனைகள் தேவைப்பட்டால், அவை இந்த மருந்தகத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

அவர்கள் உங்கள் வீட்டு சூழ்நிலையைப் பற்றியும் உங்களிடம் கேட்டு அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு உங்களுக்குத் தேவையான ஆதரவு இருப்பதை உறுதி செய்து கொள்வார்கள். அறுவைச்சிகிச்சைக்குப் பின் வீட்டில் எவ்வாறு சமாளிப்பீர்கள் என்பதையும் மற்றும் உங்களைப் பார்த்துக் கொள்ளவும் கண்களில் சொட்டு மருந்து போடவும் யாராவது உங்களுடன் தங்கமுடியுமா என்பதையும் திட்டமிடுவது முக்கியம். குறிப்பாக உங்கள் மற்றைய கண்ணில் பார்வைக்குறைவாக இருந்தால் இது முக்கியம். அறுவைச்சிகிச்சைக்குப் பின் நீங்கள் சுலபமாக நடமாட வசதியாக இருக்க மரச்சாமான்களை நீங்கள் நகர்த்த விரும்பலாம்.

## உங்கள் வழக்கமான மருந்துகள்

அறுவைச்சிகிச்சைக்கு முன்னாலான மதிப்பீட்டு மருந்தக ஊழியர்கள் நீங்கள் எடுத்துக் கொண்டு வரும் மருந்துகளைப் பதிவு செய்வார்கள். தயவு செய்து மருந்துகளின் ஒரு பட்டியலையோ அல்லது மருந்துகளையோ அதனுடைய பெட்டிகளுடன் எடுத்து வரவும். இது நீங்கள் எடுத்துக்கொள்ளும் பரிந்துரை தேவைப்படாத மருந்துகள் அல்லது மூலிகை மருந்துகளும் உள்ளடக்க வேண்டும்.

பொதுவாக அறுவைச்சிகிச்சைக்கு முன் வழக்கம்போல் எல்லா மருந்துகளையும் எடுத்துக்கொள்ளலாம். எனினும், சில மருந்துகள் அல்லது மாத்திரைகள் அறுவைச்சிகிச்சை அன்றோ அல்லது சில நாட்களுக்கு முன்போ நிறுத்தப்பட வேண்டும். எதை எடுத்துக்கொள்ள வேண்டும் எதை நிறுத்த வேண்டும் என்பது பற்றி உங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படும். இந்த அறிவுரைகள் முக்கியமானவை மேலும் அவை கவனமாகப் பின்பற்றப்பட வேண்டும்.

நீங்கள் க்ளாபிடோக்ரெல், ரிவரோக்ஸபன், வார்ஃபேரின் அல்லது பிற ‘இரத்தத்தை-நீர்க்கும்’ மருந்துகள் எடுத்துக்கொண்டால் அவை குறித்த உங்களுக்குக் குறிப்பிட்ட அறிவுரைகள் தேவைப்படலாம். இந்த மருந்துகளை நிறுத்துவதால் அபாயங்கள் ஏற்படலாம் அதனால் நீங்கள் உங்கள் மருத்துவருடன் இந்த அபாயங்களைப்பற்றி கலந்தாலோசிக்க வேண்டும். கண்புரை அறுவைச்சிகிச்சைக்கு இந்த மருந்துகளை நீங்கள் நிறுத்த வேண்டியிருக்காது.

# அறுவைச் சிகிச்சை நாளன்று

## உணவு மற்றும் பானங்களை நிறுத்தவேண்டுமா அப்படியானால் எப்போது என்பது பற்றி நீங்கள் தெளிவான அறிவுரைகள் பெறவேண்டும்.

குறிப்பான அறிவுரைகள் இருந்தாலே தவிர, நீங்கள் உங்கள் வழக்கமான மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அறுவைச்சிகிச்சைக்கு முன் உணவு மற்றும் பானங்கள் எடுத்துக்கொள்வதைபற்றி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். தேவையான மாத்திரைகளை எடுத்துக்கொள்ளும் போது தண்ணீர் குடிக்கலாம்.

அறுவைச்சிகிச்சையன்று உங்களுக்கு இருமல் அல்லது கடுமையான தடுமன் இருந்தால்,ஆலோசனைக்காக மருத்துவமனை வார்டைத் தொலைபேசியில் அழைக்கவேண்டும். உங்கள் அறுவைச்சிகிச்சையை தள்ளிப்போட வேண்டியிருக்கலாம்.

தயவுசெய்து உங்கள் அனைத்து மருந்துகள்,மாத்திரைகள் மற்றும் உள்ளிழுப்பான்களை உங்களுடன் எடுத்துவாருங்கள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அவைகளை சரிபார்க்க முடியும்.

## உங்கள் அறுவைச்சிகிச்சை மருத்துவரை சந்திப்பது

நீங்கள் உங்களுடைய கண் அறுவைச்சிகிச்சை மருத்துவரால் பார்க்கப்படுவீர்கள் (கண் மருத்துவர்). எந்தக் கண்ணில் அறுவைசிகிச்சை செய்யப்பட இருக்கிறது என்பதைப் பரிசோதித்து, அறுவை சிகிச்சை பற்றி உங்களுடன் ஆலோசிப்பார்கள். ஒப்புதல் படிவத்தில் கையெழுத்திடுமாறு கேட்கப்படுவீர்கள், மேலும் அறுவைசிகிச்சை செய்யவேண்டிய கண்ணுக்கு அருகில் அடையாளமிடுவார்கள்.

## உங்கள் மயக்க மருந்து மருத்துவரைச் சந்தித்தல்

உங்கள் கண் அறுவை சிகிச்சை மருத்துவருடன் மயக்க மருந்து மருத்துவரும் இருந்தால், நீங்கள் அவர்கள் இருவரையும் சந்திப்பீர்கள் மேலும் மயக்க மருந்து பற்றிய உங்கள் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிப்பார்கள்.

உயர் பயிற்சிப் பெற்ற சுகாதார பராமரிப்பாளர்களான மயக்க மருந்து நிபுணர்களின் உதவியாளர்களையும் நீங்கள் சந்திக்கலாம். நீங்கள், கீழ்வரும் எங்கள் வலைதளத்தில் மயக்கமருந்துக் குழு மற்றும் அவர்கள் பங்கு பற்றி மேலும் படிக்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/anaesthesia-team

## உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சை நிபுணரிடம் நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகள்

- எனது மயக்க மருந்தை யார் தருவார்கள்?
- இந்த வகை மயக்க மருந்தை நீங்கள் அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறீர்களா?
- நான் தல மயக்க மருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமா?
- இந்த வகை மயக்க மருந்துகளின் அபாயங்கள் என்ன?
- எனக்கு ஏதேனும் தனிப்பட்ட அபாயங்கள் உள்ளதா?
- அதன் பிறகு நான் எப்படி உணர்வேன்?

## நான் ஓய்வாக உணர ஏதேனும் எடுத்துக் கொள்ளலாமா?

உங்கள் மயக்க மருந்து நிபுணரும் அறுவை சிகிச்சை அறையில் உள்ள பிற ஊழியர்களும் மன உறுதியளிப்பதில் மற்றும் ஓய்வாக உணரச் செய்வதற்கு உதவுவதில் மிகவும் பயிற்சிபெற்றவர்களாக இருப்பார்கள். சில நேரங்களில் தூக்க மருந்துகள் கொடுக்கப்படலாம். இருப்பினும்,நீங்கள் தூங்கிய பின் திடீரென்று எழுந்து விழித்து நகர்ந்துவிட்டாலோ அல்லது உங்கள் சுவாசம் குறைந்துவிட்டாலோ அறுவை சிகிச்சையின் போது அவை சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும். உங்கள் கவலைகளை உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சை நிபுணரிடம் விவாதிக்கவும். உங்களுக்கு கிடைக்கும் விருப்பங்களை அவர்கள் உங்களுடன் விவாதிக்க முடியும்.

அமைதியூட்டல் பற்றிய கூடுதல் தகவல் அறிய, எங்கள் *அமைதியூட்டல் விளக்கம்* துண்டுப் பிரசுரத்தைப் பாருங்கள் இது எங்கள் வலைத்தளத்தில் கிடைக்கும்: www.rcoa.ac.uk/patientinfo/sedation

## அடுத்து என்ன நடக்கும்?

- நீங்கள் ஒரு மருத்துவமனை அங்கி போடுமாறு கேட்கப்படலாம். சில மருத்துவமனைகள் சொந்த ஆடைகளை அணிய அனுமதிக்கின்றன. கழுத்து தளர்வான வசதியான ஆடைகளை நீங்கள் அணிய வேண்டும்.
- சில அறுவைசிகிச்சைகளுக்கு, உங்கள் கண்ணின் விழிப்படத்தை இலகுவாக்குவதற்காக (அதை பெரிதாக்குவதற்கு) வார்டில் உள்ள செவிலியர் கண்சொட்டுகளை வழங்குவார். உங்கள் பார்வை சிறிது நேரத்தில் சற்று மங்கலாகிவிடும்.
- நீங்கள் அறுவை சிகிச்சை அறைக்குச் செல்வதற்கு முன்பு கழிப்பறையைப் பயன்படுத்துவது விவேகமானதாகும், இதனால் நீங்கள் இன்னும் வசதியாக படுத்துக்கொள்ள முடியும்.

- ஒரு செவிலியர் டிராலி, சக்கர நாற்காலி மூலம் அறுவை சிகிச்சை அறைக்கு உங்களைக் கூட்டிச் செல்வார் அல்லது நீங்கள் விரும்பினால், நீங்கள் நடந்து செல்லலாம்.

உங்கள் அடையாளத்தை மற்றும் என்ன அறுவை சிகிச்சை செய்து கொள்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த அறுவை சிகிச்சை அறை ஊழியர்கள் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்பார்கள். எந்தக் கண்ணில் அறுவை சிகிச்சை செய்யப்பட இருக்கிறது என்று மீண்டும் உங்களிடம் கேட்டு உங்கள் ஒப்புதல் படிவத்தில் அதைச் சரிபார்ப்பார்கள்.

## மயக்கமருந்து அறையில்

நகரும் வண்டியில் நீங்கள் வசதியாக வைக்கப்படுவீர்கள். உங்கள் முதுகு மற்றும் இடுப்புப் பகுதில் சிரமத்தைக் குறைக்க பெரும்பாலும் தலையணை உங்கள் முழங்கால்களின் கீழ் வைக்கப்படுகிறது.

உங்கள் மயக்க மருந்து நிபுணர் பின்வருனவற்றைக் கண்காணிப்பதற்கான உபகரணங்களைப் பொருத்தலாம்:

- **உங்கள் இதயம்:** உங்கள் மார்பில் ஸ்டிக்கர்கள் (எலக்ட்ரோ கார்டியோகிராம் அல்லது ஈ.சி.ஜி)
- **உங்கள் இரத்த அழுத்தம்:** உங்கள் கையில் ஒரு இரத்த அழுத்த சுற்று வைக்கப்படலாம். இது அறுவை சிகிச்சையின் போது ஒவ்வொரு 5 முதல் 15 நிமிடங்களுக்கு உங்கள் இரத்த அழுத்தத்தை அளவிடும். இது உங்கள் கையில் இறுக்க உணர்வைத் தரும்
- **உங்கள் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் நிலை:** உங்கள் விரலில் ஒரு கிளிப் மாட்டப்படும் (துடிப்பு ஆக்சிமீட்டர்).

உங்கள் புஜம் அல்லது கையின் பின்புறத்தில் ஒரு நரம்புக்குள் ஒரு மெல்லிய மென்மையான பிளாஸ்டிக் குழாயை (ஒரு கேனுலா) வைக்க ஒரு ஊசி பயன்படுத்தப்படுகிறது. இது பிசின் கொண்டு ஒட்டப்படுகிறது. இது உங்களுக்குத் தேவையான மருந்துகளை மயக்க மருந்து மருத்துவர் வழங்குவதற்காகும்.

உங்கள் பெயர், பிறந்த தேதி மற்றும் நீங்கள் செய்து கொள்ளும் அறுவை சிகிச்சையை உறுதிப்படுத்த மயக்க மருந்து குழு மீண்டும் சரிபார்க்கும்.

உங்கள் கண்ணை உணர்விழக்கச் செய்ய மயக்க மருந்து நிபுணர் அல்லது கண் அறுவை சிகிச்சை நிபுணர் கண் சொட்டுகள் மற்றும் / அல்லது ஊசி போடுவார்.

## மயக்க மருந்து எடுத்தல்

### தல மயக்க மருந்து ஊசி காயம் ஏற்படுத்துமா?

இது நபருக்கு நபர் மாறுபடும். குத்தல், அழுத்தம் அல்லது வலி இருக்கலாம், இது பொதுவாக ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே நீடிக்கும்.

### தல மயக்க மருந்து கொடுக்கப்பட்ட பிறகு என்ன நடக்கும்?

கண்ணின் மேற்பரப்பைத் தொடுவதையும் சேதப்படுத்துவதையும் தடுக்க அறுவை சிகிச்சை செய்யப்படும் கண் மூடி வைக்கப்படும். மயக்க மருந்து சமமாகப் பரவுவதற்காக ஊழியர்கள் உங்கள் கண்ணுக்கு மசாஜ் செய்யலாம், அழுத்தத்தைப் பயன்படுத்தலாம் அல்லது மூடிய கண் மீது ஒரு சிறிய எடையை வைக்கலாம்.

### மயக்க மருந்து வேலை செய்கிறது என்பது நான் அறிந்து கொள்வது எப்படி?

உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது கண் அறுவை சிகிச்சை நிபுணர் உங்கள் கண் உணர்ச்சியற்று உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வார். மயக்க மருந்தின் விளைவுகளை மதிப்பிடுவதற்காக, நீங்கள் வெவ்வேறு திசைகளில் பார்க்கும்படி கேட்கப்படலாம். மயக்க மருந்து நன்கு வேலை செய்கிறது என்று அவர்கள் தீர்மானித்தபிறகு, அவர்கள் உங்களை அறுவைச் சிகிச்சை அரங்கத்துக்கு அழைத்துச்செல்வார்கள்.

### அறுவைச் சிகிச்சை அரங்கத்தில் என்ன நடக்கும்?

- இதயம் மற்றும் நாடித் துடிப்பு கண்காணிப்பான்கள் மீண்டும் இணைக்கப்படும்.
- நீங்கள் வசதியாகப் படுத்திருக்கிறீர்களா என்பதைச் செவிலியர் சரிபார்ப்பார்.
- அறுவைச் சிகிச்சை செய்யும் குழு உங்களுடைய தகவல்களையும், அனைத்துக் கருவிகளும் சரியாக உள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக இன்னொருமுறை சரிபார்ப்பார்கள்.
- அறுவைச் சிகிச்சைமுழுவதும் உங்கள் கையைப் பிடித்துக்கொண்டிருப்பதாக ஓர் ஊழியர் கூறக்கூடும்.
- உங்கள் கண்ணைச் சுற்றியுள்ள பகுதியைத் தூய்மையாக வைப்பதற்காக, உங்கள் முகத்தின்மீது ஒரு தொற்று நீக்கப்பட்ட அறுவைச் சிகிச்சைத் தாள் ஒரு கூடாரம்போல் வைக்கப்படும். அந்தத் தாளில் ஒரு துளை இருக்கும், அதன் வழியாக அறுவைச் சிகிச்சை மருத்துவர் அறுவை சிகிச்சை செய்வார்.
- அறுவைச் சிகிச்சைத் தாளுக்குக் கீழே ஒரு குழாய் வைக்கப்படலாம், அது உங்கள் வாய் மற்றும் மூக்கைச் சுற்றித் தூய காற்று/ஆக்ஸிஜனை வழங்கும். இது அறுவைச் சிகிச்சையின்போது நீங்கள் வசதியாக உணர்வதற்கு உதவும்.

உங்கள் கண்ணைச் சுற்றியுள்ள பகுதி ஒரு குளிர் நீர்மத்தால் தூய்மைப்படுத்தப்படும். அறுவைச் சிகிச்சையின்போது, உங்கள் கண்ணை ஈரமாக வைத்திருக்கத் தண்ணீர் பயன்படுத்தப்படும். இந்தத் தண்ணீர் உங்கள் முகத்தின் பக்கத்தில் சொட்டாமல் பார்த்துக்கொள்வதற்குக் கவனம் எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், சில நேரங்களில், அதைத் தவிர்ப்பது கடினம்.

## அறுவைச் சிகிச்சையின்போது நான் பேசலாமா?

**அறுவைச் சிகிச்சை மருத்துவர் உங்கள் கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்யும்போது பேசாமல் இருப்பதே நல்லது**, அறுவை சிகிச்சை மருத்துவர் உங்களிடம் கேள்வி கேட்காத வரையில். உங்கள் முகத்தை அசைப்பது அறுவைச் சிகிச்சையைப் பாதிக்கலாம். நீங்கள் ஏதாவது சொல்ல விரும்பினால், உங்கள் கையை அசைப்பது சிறந்தது. அப்போது, கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்வதை நிறுத்திவிடுவார், அதன்பிறகு நீங்கள் பேசலாம்.

## எனக்கு என்ன கேட்கும்?

அறுவைச் சிகிச்சையின்போது, அரங்கக் குழுவினரிடம் அறுவைச் சிகிச்சை மருத்துவர் பேசுவது உங்களுக்குக் கேட்கும். அரங்கத்தில் உள்ள கருவிகள் பல ஒலிகளை எழுப்பலாம். இதயக் கண்காணிப்பான் 'பீப்' ஒலி எழுப்பலாம். சில இயந்திரங்கள் பெண் குரலில் அவ்வப்போது செய்திகளைப் படிக்கும். இது அமைப்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப்பற்றி அறுவைச் சிகிச்சை மருத்துவருக்குத் தெரிவிப்பதற்காகும். நீங்கள் ஏதாவது செய்யவேண்டும் என்று அறுவைச் சிகிச்சை மருத்துவர் விரும்பினால், எடுத்துக்காட்டாக, நீங்கள் உங்கள் முகவாய்க்கட்டையைச் சிறிது தூக்கவேண்டும் என்றால், அவர் உங்களைப் பெயர் சொல்லி அழைப்பார். உங்கள் பெயர் அழைக்கப்படவில்லை என்றால், நீங்கள் பதில் அளிக்கவேண்டியதில்லை.

## நான் எதையேனும் பார்ப்பேனா?

பொதுவாக, நீங்கள் பிரகாசமான ஒளிகளைப் பார்க்க இயலும், மேலும், அறுவைச் சிகிச்சையின்போது நீங்கள் சில அசைவுகளைக் காணலாம். இது நபருக்கு நபர் மாறுபடும். நீங்கள் தெளிவாக எதையும் காண இயலாது, விஷயங்கள் மங்கலாகத் தோன்றலாம்.

## வேறு என்ன நடக்கும்?

உங்கள் கண்ணுக்குள் செல்லும் நுணுக்கமான கருவிகளைப் பயன்படுத்தி அறுவைச் சிகிச்சை மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்வார், உங்கள் கண் அதன் இயல்பான நிலையிலிருந்து நீக்கப்படாது.

## அறுவைச் சிகிச்சையின்போது நான் வலியை உணர்வேனா?

அறுவைச் சிகிச்சை வல்லுனர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும், பொதுவாக, சிறு தொடுகை மற்றும் அழுத்தத்தை நீங்கள் உணர்வீர்கள். ஆனால், உங்களுக்கு எந்த வலி உணர்வும் இருக்கக்கூடாது. **நீங்கள் வசதியற்று அல்லது வலியை உணர்ந்தால், நீங்கள் உடனே உங்கள் அறுவைச் சிகிச்சை வல்லுனருக்குத் தெரிவிக்கவேண்டும். இதன்மூலம், தேவைப்பட்டால், அவர் உங்களுக்குக் கூடுதல் தல மயக்க மருந்தை அளிப்பார்.**

## நான் கண் சிமிட்டலாமா?

எந்தக் கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறதோ, அந்தக் கண்ணின் இமை திறந்தே இருக்கும்படி ஒரு சிறிய க்ளிப் பொருத்தப்படுகிறது. இதன் பொருள், நீங்கள் உங்களுடைய மற்ற கண்ணைச் சிமிட்டலாம். நீங்கள் உங்கள் முகத்தை அசைக்காதவரையில், கண் சிமிட்டுவதால் பிரச்சனை இல்லை.

## ஒருவேளை நான் நெளிய, இரும, என் தொண்டையைக் கணைக்க அல்லது என் மூக்கைச் சொரிய விரும்பினால்?

நீங்கள் ஓய்வான முறையில் இயன்ற வரை அசையாமல் படுத்திருக்க வேண்டும். குறிப்பிடக்கூடிய எந்த அசைவையும் செய்யும் முன் (இருமுதல், சொரிதல் அல்லது உங்கள் நிலையைச் சரிசெய்ய நெளிதல் உள்பட) நீங்கள் உங்களுடைய கையை அசைத்து, அறுவைச் சிகிச்சை மருத்துவருக்கு அதைப்பற்றி எச்சரிக்கவேண்டும். அப்போது, அறுவைச் சிகிச்சை வல்லுனர் அறுவைச் சிகிச்சை செய்வதை நிறுத்துவார், நீங்கள் பாதுகாப்பாக நகரலாம்.

## அறுவைச் சிகிச்சையின்போது நான் தூங்கிவிட்டால்?

அறுவைச் சிகிச்சையின்போது நீங்கள் விழித்திருப்பது முக்கியம், ஏனெனில், தூக்கத்திலிருந்து விழித்து எழும்போது ஏற்படும் திடீர் அசைவு, உங்கள் கண்ணைச் சேதப்படுத்துகிற ஆபத்து உள்ளது. நீங்கள் விழித்திருக்கிறீர்களா, வசதியாக உணர்கிறீர்களா என்று அறுவைச் சிகிச்சை வல்லுனர் அவ்வப்போது கேட்பார். நீங்கள் குறிப்பிடக்கூடிய வகையில் அசையாமல் இருக்கவேண்டிய நேரங்கள் ஏதும் இருந்தால், அதைப்பற்றியும் அவர் உங்களுக்குச் சொல்லி எச்சரிப்பார்.

## என்னால் சிறுநீரை அடக்க இயலாது. ஒருவேளை, நான் கழிப்பறைக்குச் செல்லவேண்டியிருந்தால்?

அரங்கத்துக்கு அழைத்துவரப்படுவதற்குச் சற்று முன்பாக முழுமையாகச் சிறுநீரை வெளியேற்றி உங்களுடைய சிறுநீர்ப் பையைக் காலியாக்குவது முக்கியம். ஒருவேளை, உங்களால் சிறுநீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை,

கழிப்பறைக்குச் செல்லவேண்டும் என்ற தூண்டுதல் உங்களுக்கு உண்டாகிறது என்றால், தயவுசெய்து, அதைக் குழுவுக்குத் தெரிவியுங்கள். உங்களுக்கு உதவுவதற்குத் தேவையான படிநிலைகளை அவர்கள் எடுப்பார்கள்.

### அறுவைச்சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, பாதியில் நான் வலியை உணரக்கூடுமா?

ஆம். சில சிகிச்சை முறைகளின்போது, உணர்ச்சி நீக்கியின் தாக்கம் குறையத் தொடங்கலாம். எந்த நேரத்திலாவது நீங்கள் வசதியின்மை அல்லது வலியை உணர்ந்தால், அதை அறுவைச் சிகிச்சை வல்லுனருக்குத் தெரிவியுங்கள்.

### அறுவைச் சிகிச்சை எவ்வளவு நேரம் நடைபெறும்?

பெரும்பாலான செயல்முறைகள் அரை மணி நேரத்திலிருந்து ஒரு மணி நேரம்வரை நடைபெறுகின்றன. சில செயல்முறைகளுக்கு இரண்டு மணி நேரம்வரை ஆகலாம். உங்களுடைய அறுவைச் சிகிச்சை உத்தேசமாக எவ்வளவு நேரம் நடைபெறும் என்பதைப்பற்றி அறுவைச் சிகிச்சை மருத்துவர் உங்களிடம் தெரிவிப்பார்.

### அறுவைச் சிகிச்சையின்போது நான் என்னுடைய காது கேட்கும் கருவியை அணியலாமா?

அறுவை சிகிச்சை செய்யப்படும் கண்ணின் அதே பக்கத்தில் உள்ள காது கேட்கும் கருவியை நீக்குவது ஒரு வழக்கமான செயல்முறையாகும். ஏனெனில், கவனமாக இருந்தால் கூட, காதுக்குள் நீர் நுழையலாம், அதனால், காது கேட்கும் கருவி தவறாகச் செயல்பட்டு இரைச்சல் எழுப்பத் தொடங்கலாம். அறுவைச் சிகிச்சை நடைபெறாத பக்கத்தில் நீங்கள் உங்களுடைய காது கேட்கும் கருவியை அணியலாம்.

# அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு

ஒரு செவிலியர் ஒரு சக்கர நாற்காலியில் உங்களை மீண்டும் வார்டுக்கு அழைத்துச்செல்வார். இரண்டு முதல் மூன்று மணி நேரங்களுக்கு, சில நேரங்களில் அதைவிடக் கூடுதலாக உங்கள் கண் தொடர்ந்து மரத்துப் போய் இருக்கும்.

நீங்கள் தூங்கும்போது கண்ணைத் தேய்க்காமல் தடுப்பதற்காகவும் உங்கள் கண்ணைப் பாதுகாப்பதற்காகவும் அடுத்த நாள்வரை உங்கள் கண் ஒரு

பட்டையால் மூடப்பட்டிருக்கலாம். கண் பட்டை நீக்கப்படும்போது, நீங்கள் பல மணி நேரங்களுக்கு இரட்டைப் பார்வையை உணரலாம்.

## நான் எப்போது சாப்பிட, குடிக்கத் தொடங்கலாம்?

நீங்கள் வார்டுக்குத் திரும்பியதும் சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் தயாராகலாம்.

## நான் எப்போது வீட்டுக்குச் செல்லலாம்?

நீங்கள் நன்கு உணரும் போது, ஏதேனும் சாப்பிட்டுவிட்டீர்கள், குடித்துவிட்டீர்கள் என்றால், நீங்கள் வீட்டுக்குச் செல்லலாம்.

உங்களுக்கு உணர்வு இழப்பு மருந்து அளிக்கப்பட்டிருந்தால், பொறுப்புள்ள வயதுவந்தவர் ஒருவர் காரில் அல்லது வாடகைக் காரில் உங்களை வீட்டுக்கு அழைத்துச்செல்லவேண்டும். 24 மணி நேரத்துக்கு நீங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளக்கூடாது, கீழுள்ள துண்டுப்பிரசுரத்தில் உள்ள அறிவுரையைப் பின்பற்றவேண்டும்.

பொது உணர்ச்சி நீக்கி அல்லது மயக்க மருந்து எடுத்துக்கொண்ட ஒருவரை கவனிப்பவர்களுக்கான விவரங்களை எங்கள் துண்டுப்பிரசுரம் *பொது உணர்ச்சி நீக்கி அல்லது மயக்க மருந்து எடுத்துக்கொண்ட ஒருவரை கவனித்தல்* என்பதில் பார்க்கலாம் இது எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கிறது:
www.rcoa.ac.uk/patientinfo/sedation

நீங்கள் உட்கொள்ளவேண்டிய மருந்துகள் எவையேனும் இருந்தால், அதைப்பற்றி வார்டில் உள்ள செவிலியர் உங்களுக்குச் சொல்வார்; உங்களுக்கு எழுத்து வடிவிலான வழிகாட்டுதல்களையும் வழங்குவார். அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்து, வீக்கத்தைக் (அழற்சி) குறைப்பதற்கும் நோய்த்தொற்றைத் தடுக்க உதவுவதற்கும் கண் சொட்டு மருந்துகள் பயன்படுத்தப்படலாம். நீங்கள் ஒரு பரிசோதனைக்காக மீண்டும் மருந்தகத்துக்கு வரவேண்டும் என்றால், உங்களுக்கு அதைப்பற்றிச் சொல்லப்படும்.

## நான் வலியில் இருப்பேனா?

உணர்ச்சி நீக்கியின் ஆற்றல் நீங்கும்போது, அறுவைச் சிகிச்சையின் வலியை நீங்கள் சிறிதளவு உணரலாம். அந்த நேரத்தில் பாரசிட்டமால் போன்ற ஒரு வலிநிவாரணிகள் தேவைப்படலாம்.

நீங்கள் தீவிர வலியை எதிர்கொண்டால், உங்கள் ஆவணங்களில் அளிக்கப்பட்டுள்ள எண்ணைத் தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள். ஏனெனில், இது இயல்பானது இல்லை, இது ஒரு பிரச்சனையைச் சுட்டிக்காண்பிக்கலாம்.

## நான் ஏதும் சிறப்புக் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டுமா?

- உங்கள் கண்களைத் தேய்க்காதீர்கள்.
- உங்கள் கண்ணில் ஏதும் விழாமல் பார்த்துக்கொள்ளுங்கள் உங்கள் கண்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் (குறிப்பாக காற்று பலமாக வீசும் வானிலையில்).
- உங்களைக் மருத்துவக் குழுவின் அறிவுரைப்படி, மிகவும் கனமான பொருட்களைத் தூக்குதல், கடுமையான உடற்பயிற்சி, நீச்சல் ஆகியவற்றை ஒரு வார காலத்துக்குச் செய்யவேண்டாம்.
- உங்கள் பார்வை இன்னும் மோசமாகிறது அல்லது உங்கள் கண் மிகவும் வலிக்கிறது என்றால், நீங்கள் உடனே மருத்துவமனையைத் தொடர்புகொண்டு அறிவுரை பெறவேண்டும்.
- நீங்கள் கான்டாக்ட் லென்ஸஸ் அணிகிறவர் என்றால், இதுபற்றி உங்கள் மருத்துவரிடம் ஆலோசிக்கும் வரை அவற்றை அணியவேண்டாம்.

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொறுப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எங்களுக்குச் சொல்லுங்கள்

இந்தத் துண்டுப்பிரசுரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**மயக்க மருந்து வல்லுனர்களுக்கான அரசக் கல்லூரி**
சர்ச்சில் இல்லம், 35 சிவப்புச் சிங்கச் சதுக்கம், லண்டன் WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

ஐந்தாம் பதிப்பு, பிப்ரவரி 2020

வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் இந்த துண்டுப் பிரசுரம் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2020 மயக்க மருந்து வல்லுனர்களுக்கான அரசக் கல்லூரி**

நோயாளித் தகவல் வளங்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்த துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதியை மற்றொரு வெளியீட்டில் நீங்கள் பயன்படுத்த விரும்பினால், தகுந்த ஒப்புகை அளிக்கப்படவேண்டும், மேலும் சின்னங்கள், தர அடையாளம் மற்றும் படிமங்கள் நீக்கப்பட வேண்டும். மேலும் தகவல்களுக்கு, எங்களைத் தொடர்புகொள்ளவும்.